# பிற்சேர்க்கை 1

# மாற்றத்திற்கான தெய்வீக செயல்பாடு

*“ஒவ்வொன்றும் நிறைவில் தேவனுடைய கிருபையையே சார்ந்துள்ளது. அவருடைய கிருபையே இரட்சிப்பின் மூல ஆதாரமாகவும் இரட்சிப்பை நிலைநிறுத்தும் வல்லமையாகவும், அதை ஊக்கப்படுத்துவதாகவும் உள்ளது.”*

பாவியொருவர் கிறிஸ்தவராகுவதைத் தேர்ந்து கொள்ளும் போது அவருக்குத் தேவன் என்ன செய்கின்றார்? பாவியை இரட்சிப்புக்குள் அவர் (தேவன்) கொண்டு வருகையில் என்ன தெய்வீகச் செயல்பாடுகளைச் செய்கின்றார்? கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் நாம் பிரவேசிக்கும் பொழுது நமக்கு தேவன் என்ன செய்கின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிந்தால், “கிறிஸ்துவுக்கென்று மாறுதல்” என்று நாம் அழைக் கின்ற இந்த “சிறப்பான தொடக்கத்திற்கான” நமது பாராட்டுதலானது அளவிடற்கரிய முறையில் பெருகும்.

ஒருவர் கிறிஸ்தவராகும்பொழுது அவருக்குத் தேவன் செய்கின்ற செயல்கள் பற்றிய பின்வரும் அட்டவணையை கவனமாய்ப் படியுங்கள். ஒவ்வொரு குறிப்பிட்ட செயலின் கீழும் உண்மையில் தேவன் இச்செயலைச் செய்கின்றார் என்று குறிப்பிடுகின்ற வேத வசனப் பகுதிகளில் குறைந்தது ஒன்றையாவது நீங்கள் காண்பீர்கள். சில நிகழ்ச்சிகளுக்கு எண்ணற்ற வசனப் பகுதிகளைக் குறிப்பிட முடியும், ஆனால் அந்தச் செயல் நடைபெறுகின்றது என்பதை நிரூபிக்க ஒரு வசனமே போதுமானதாகும். ஒருவர் கிறிஸ்த வராகும்போது நமது கிருபையுள்ள தேவனால் இந்த அட்டவணையின்படி, நாற்பத்தியிரண்டு மாறுபட்ட மற்றும்/அல்லது தொடர்புடைய செயல்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை நீங்கள் கவனிப்பீர்கள். இந்த நியமனப் பெயர்களில் சில ஒன்றின் மீது மற்றொன்று அமைந்த நிலையில் உள்ளன, மற்றும் அவை ஒரே விஷயத்தை மாறுபட்ட வகையில்

கூறுவதாய் உள்ளன. இந்த சந்தர்ப்பப் பொருளில், செயல்பாடுகளுக்கு மத்தியில் வித்தியாசப் படுத்துவதற்கான நேர்த்தியான கோடுகள் எதுவும் வரையப்பட்டிருக்கவில்லை. தேவன் தம்முடைய குடும்பமாகிய சபையில் நம்மை நடத்தி அமர்த்துகையில் அவருடைய செயல்பாடுகளை விளக்கு கின்ற வேத வசனப் பகுதிகளை நமக்குமுன் கொண்டுவருதல் என்பதே இந்த அட்டவணையின் நோக்கமாக உள்ளது. இந்தச் செயல்பாடுகளின் நோக்க எல்லையை ஏறக்குறைய மேம்போக்காக நாம் காண்போம்.

*(1)* **இரட்சகராகக் கிறிஸ்து நமக்கு கொடுக்கப்பட்டுள்ளார்.**
*தீத்து 3:5, 7*
*''நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் ... அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.''*

*(2)* **ஒரே சரீரத்திற்குள்ளாக நாம் கொண்டுவரப்படுகின்றோம்.**
*1 கொரி. 12:13*
*''நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற் குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.''*

*(3)* **கிறிஸ்துவைக்கொண்டு நாம் தரிப்பிக்கப்படுகின்றோம்.**
*கலா. 3:27*
*''ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே.''*

*(4)* **கிறிஸ்துவினுடைய மரணத்தின் பலன்களை நாம் பெறுகின்றோம்.**
*ரோமர் 6:3*
*''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனை வரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?''*

*(5)* **தேவனால் நாம் பிறந்துள்ளோம்.**
*1 யோவா. 5:1*
*''இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்பு கூருகிறான்.''*

(6) **கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் கழுவப்பட்டிருக்கின்றோம்.**
*வெளி. 1:6*
*"நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, ... அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்."*

(7) **நாம் இரட்சிக்கப்பட்டிருக்கின்றோம்.**
*மாற். 16:16*
*"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்."*

(8) **நமது பாவத்திலிருந்து மன்னிக்கப்பட்டிருக்கின்றோம்.**
*கொலோ. 1:13, 14*
*"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமா யிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். [குமாரனாகிய] அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது."*

(9) **தேவனுடைய பார்வையில் நாம் நீதிமான்களாக்கப் பட்டிருக்கின்றோம்.**
*ரோமர் 3:23, 24*
*"எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசு விலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்."*

(10) **நாம் மீட்கப்பட்டிருக்கின்றோம்.**
*எபே. 1:7*
*"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது."*

(11) **பாவத்தின் அடிமைத்தனத்தினின்று நாம் விடுவிக்கப் பட்டுள்ளோம்.**
*ரோமர் 6:17, 18*
*"முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்."*

(12) **நாம் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றோம் அல்லது பரிசுத்தமாக்கப்பட்டிருக்கின்றோம்.**

*1 கொரி. 6:11*

*“உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.”*

(13) **நாம் தேவனுடைய புத்திரராகச் சுவிகரிக்கப்பட்டிருக்கின்றோம்.**

*எபே. 1:6*

*“தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்.”*

(14) **நாம் ஆவிக்குரிய வகையில் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கின்றோம்.**

*எபே. 2:5*

*“அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.”*

(15) **நாம் கிறிஸ்துவுடன் கூட அமரச் செய்யப்பட்டிருக்கின்றோம்.**

*எபே. 2:7*

*“கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.”*

(16) **நாம் தேவனுடைய கிருபையைப் பெறுகின்றவர்களாகிறோம்.**

*எபே. 2:8, 9*

*“கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைப்பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.”*

(17) **நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டிருக்கின்றோம்.**

*கொலோ. 1:19, 20*

*“சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, … அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.”*

(18) **நாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக ஆக்கப்பட்டிருக்கின்றோம்.**

*எபே. 2:14-16*

*“எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய*

*நடுச்சுவரைத் தகர்த்து, ... இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத் தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்."*

*(19)* **நாம் புது சிருஷ்டிகளாக்கப்பட்டிருக்கின்றோம்.**
*2 கொரி. 5:17*
*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின."*

*(20)* **நாம் தேவனுடைய சுதந்தரராக்கப்பட்டிருக்கின்றோம்.**
*ரோமர் 8:17*
*"நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்து வுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்."*

*(21)* **தெய்வீகம் நமக்குள் வாசமாயிருக்கும்படியாக்கப் பட்டிருக்கின்றோம்.**

**ஆவியானவர் வாசமாயிருத்தல்**
*கலா. 4:6*
*"மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனு டைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்."*

**தேவன் வாசமாயிருத்தல்**
*1 யோவா. 4:15*
*"இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்."*

**கிறிஸ்து வாசமாயிருத்தல்**
*யோவா. 14:23*
*"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து, அவனோடே வாசம்பண்ணுவோம் என்றார்."*

*(22)* **ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பெற நமக்கு சிலாக்கியம் அளிக்கப்பட்டிருக்கிறது.**

*எபே. 1:3*

*"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்."*

*(23)* **நாம் தேவனுடைய இராஜ்யத்தின் குடிமக்களாக்கப் பட்டிருக்கின்றோம்.**

*யோவா. 3:3*

*"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்."*

*(24)* **நாம் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டிருக்கின்றோம்.**

*ரோமர் 8:1*

*"ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை."*

*(25)* **தேவன், கிறிஸ்து மற்றும் ஆவியானவர் ஆகியோருடன் நமக்கு ஐக்கியம் தரப்பட்டுள்ளது.**

*1 யோவா. 1:3*

*"நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது."*

*(26)* **தொடர்ந்து நிகழும் சுத்திகரிப்பில் நாம் பிரவேசிக்கின்றோம்.**

*1 யோவா. 1:7*

*"அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்."*

*(27)* **நாம் திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும்படி ஆக்கப்பட்டிருக்கின்றோம்.**

*2 பேது. 1:4*

*"இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய*

சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.”

*(28)* **ஜீவனுள்ள நம்பிக்கை நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.**

*1 பேது. 1:3, 4*

“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.”

*(29)* **நாம் தேவனுடைய பாதுகாப்பின்கீழ்க் கொண்டு வரப்பட்டிருக்கின்றோம்.**

*1 பேது. 1:3-5*

“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; ... தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.”

*(30)* **தேவனுடன் நமக்கு நீதியான சமாதானம் கொடுக்கப்பட்டுள்ளது.**

*ரோமர் 5:1*

“இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.”

*(31)* **தேவனுடைய அன்றாட சமாதானம் பெறும் சிலாக்கியம் நமக்கு அருளப்பட்டிருக்கின்றது.**

*பிலி. 4:7*

“அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.”

*(32)* **பரிந்து பேசுகிறவராக கிறிஸ்து நமக்கு கொடுக்கப்பட்டுள்ளார்.**

*1 யோவா. 2:1*

“என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன், ஒருவன் பாவஞ்செய்வானானால், நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில்

*பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்."*

(33) **நமக்கு நித்திய ஜீவன் அளிக்கப்பட்டிருக்கின்றது.**
*1 யோவா. 5:12*
*"குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்."*

(34) **பரலோகத்தின் ஈவை ருசி பார்க்கும்படியாக நாம் அனுமதிக்கப் பட்டிருக்கின்றோம்.**
*எபி. 6:4-6*
*"ஏனெனில், ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்த்தும் ..."*

(35) **நமது பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.**
*லூக். 10:20*
*"ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் ..."*

(36) **நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாய் இருக்கின்றோம்.**
*எபே. 1:4*
*"தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே ..."*

(37) **நமது இருதயங்கள் விசுவாசத்தினால் சுத்திகரிக்கப் பட்டிருக்கின்றன.**
*அப். 15:9*
*"விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்."*

(38) **நமது மனச்சாட்சிகள் செத்த கிரியைகளினின்று சுத்திகரிக்கப்பட்டிருக்கின்றன.**
*எபி. 10:22*
*"துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர் களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக் கடவோம்."*

(39) **நாம் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் சமீபமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றோம்.**

*எபே. 2:13*

*"முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்."*

(40) **நாம் பழைய பாவ இயல்பிலிருந்து ஆவிக்குரிய விருத்த சேதனத்தைப் பெற்றிருக்கின்றோம்.**

*கொலோ. 2:11, 12*

*"அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்."*

(41) **வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவருக்குள் நாம் முத்திரையிடப்பட்டிருக்கின்றோம்.**

*எபே. 1:13*

*"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்."*

(42) **கிறிஸ்து நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றார்.**

*யோவா. 14:21*

*"என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு, அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் ..."*